# 1

# தௌஹீத், ரிஸாலத், மஆத்




ஈமான் என்பதன் கருத்து நம்பிக்கை என்பதாகும். நம்பிக்கைகளுக்கு ஏற்பவே நடத்தைகள் அமையும். நம்பிக்கைகளும், நடத்தைகளும் சேர்ந்ததே முஃமின்களாகிய எங்களது வாழ்க்கையாகும். நடைமுறை வாழ்வில் நம்பிக்கையின் அடிப்படையிலேயே சில செயல்களை மேற்கொள்கிறோம். வேறு சிலவற்றைத் தவிர்ந்துகொள்கிறோம்.

உண்பதால் பசி தீரும் என்று நம்புகிறோம். எனவேதான் பசிக்கும்போது உணவு வகைகளைச் சமைத்தும் வாங்கியும் உண்கிறோம். நீர் அருந்துவதால் தாகம் தீரும் என்று நம்புகிறோம். எனவேதான் பயனுள்ள திரவங்களான பழச்சாறு, தேநீர், குளிர்ப்பானம் போன்ற நீராகாரங்களை அருந்தி தாகம் தீர்த்துக்கொள்கிறோம்.

விவசாயிகளைப் பாருங்கள். விதைகளை நாட்டினால் தானியம் கிடைக்கும் என்று நம்புகின்றார்கள். எனவேதான் நெல் மணிகளை விதைக்கிறார்கள். பின்பு பொன்னிறமான நெற்கதிர்களை அறுவடை செய்கின்றார்கள்.

முயற்சி செய்து படித்தால்தான் பரீட்சையில் சித்தியடையலாம் என்பது எமது நம்பிக்கை. எனவே பரீட்சை எழுதுவதற்கு முன்னர் விடாமுயற்சி செய்து படித்துப் பரீட்சை எழுதுகிறோம்.

செயல்களைச் செய்வதற்கும் செயல்களைச் செய்யாமலிருப்பதற்கும் நம்பிக்கையே அடிப்படையாக உள்ளது. நெருப்புச் சுடும் என்ற நம்பிக்கை நெருப்பில் கை வைக்காமல் தடுக்கிறது. நஞ்சு ஓர் உயிர்க்கொல்லி என்ற நம்பிக்கை அதனை அருந்தாமல் எங்களைத் தடுத்துவிடுகிறது.

இதேபோன்று முஸ்லிம்களாகிய எங்களுக்கும் நம்பிக்கைகள் இருக்கின்றன. அவற்றை விசுவாசிப்பதையே ஈமான் என்கிறோம். அதன் காரணமாகவே நாம் முஃமின்கள் (விசுவாசிகள்) என்றும் அழைக்கப் படுகிறோம்.

**ஈமான் இரண்டு வகைப்படும்.**

1. ஈமான் முஜ்மல் (சுருக்கமான விசுவாசம்)
2. ஈமான் முபஸ்ஸல் (விரிவான விசுவாசம்)

لَاإِلٰهَ إِلاَّ اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ என்ற கலிமாவின் பொருளை விளங்கி, உள்ளத்தால் உறுதியாக நம்பி, வாயால் மொழிவதன் மூலமாக இஸ்லாத்தில் நுழைந்துகொள்கிறோம்.

இந்தக் கலிமாவின் பொருள் - ''அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக் குரியவன் வேறு யாருமில்லை. முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள்'' என்பதாகும்.

இவ்வாறு விசுவாசம் கொள்வதே ஈமான் முஜ்மல் (சுருக்கமான ஈமான்) எனப்படுகிறது.

இரண்டாவது வகை ஈமான் ஆறு அம்சங்களை உள்ளடக்கியதாகும்.

آمَنْتُ بِاللهِ وَمَلاَئِكَتِهِ وَكُتُبِهِ وَرُسُلِهِ وَالْيَوْمِ الْآخِرِ
وَالْقَدْرِ خَيْرِهِ وَشَرِّهِ مِنَ اللهِ تَعَالَى


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

''நான் அல்லாஹ்வையும், அவனது மலக்குகளையும், அவனது வேதங்களையும், அவனது தூதர்களையும் விசுவாசம் கொண்டேன். மேலும் மறுமைநாள் உண்டு எனவும் விசுவாசித்தேன். மேலும் நன்மை தீமை யாவும் அல்லாஹ்வின் நாட்டப்படியே (தக்தீரின் படியே) நடைபெறும் எனவும் விசுவாசம் கொண்டேன்''

இவ்வாறு விரிவாக ஈமான் கொள்வதை ஈமான் முபஸ்ஸல் என அழைக்கின்றோம். இஸ்லாமிய அறிஞர்கள் மேற்கூறப்பட்ட ஆறு அம்ச ங்களையும் மூன்று தொகுதிகளாக வகுத்துள்ளனர். அவை

1. தவ்ஹீத் - ஏகத்துவம்
2. ரிஸாலத் - தூதுத்துவம்
3. மஆத் - மறுமையுடன் தொடர்பானவை என்பனவாகும்.

## தௌஹீத்

அல்லாஹ் மற்றும் தக்தீருடன் தொடர்பான நம்பிக்கைகள் தவ்ஹீத் (ஏகத்துவம்) என்ற முதல் தொகுதியில் உள்ளடக்கப்படுகின்றன. அல்லாஹ் ஒருவன் அவனுக்கு இணைதுணை கிடையாது. அவன் யாவற்றையும் அறிந்தவன். வல்லமை மிக்கவன். அவனது நாட்டப்படியே யாவும் நடைபெறும் என்ற நம்பிக்கைகளை உள்ளடக்கிய தொகுதியே ஏகத்துவம் என அழைக்கப்படுகின்றது.

## ரிஸாலத்

ரிஸாலத் (தூதுத்துவம்) என்ற தொகுதியில் நபிமார்கள், வேதங்கள், மலக்குமார் பற்றிய நம்பிக்கைகள் உள்ளடக்கப்படுகின்றன. மனிதர்கள் நேரிய வழியில் வாழ்வதற்காக நேர்வழியைக் காட்டிக்கொடுப்பதற்காக அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட தூதர்களே நபிமார்கள் ஆவர். இவர்களில் விசேடமானவர்கள் ரஸூல்மார்கள் என அழைக்கப்படுகின்றனர்.

ஒவ்வொரு சமூகத்திற்கும் நபிமார்கள் அனுப்பப்பட்டுள்ளனர். அவர்களுள் குறிப்பிட்ட சிலருக்கு அல்லாஹ் வேதங்களையும் ஸுஹுபு களையும் வழங்கினான். நபிமார்களுள் இறுதியானவர் முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாவார். அவருக்கு

அல்லாஹ்வால் வழங்கப்பட்ட இறுதி வேதமே அல்குர்ஆன் ஆகும். அல்லாஹ் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் என்ற மலக்கின் ஊடாகவே நபிமார்களுக்கான வேதங்களையும் போதனைகளையும் வழங்கினான். மேலும் அவனது கட்டளைப்படி இயங்கும் எண்ணிலடங்கா மலக்குகள் உள்ளனர். இவ்வாறான நம்பிக்கைகளை உள்ளடக்கிய தொகுதியே ரிஸாலத் எனப்படுகின்றது.

### மஆத்

மறுமை தொடர்பான அம்சங்களை உள்ளடக்கிய விடயங்கள் மஆத் என்ற தொகுதியில் அடங்குகின்றன. மரணத்தின் பின்னர் கப்ரில் வாழ்வு உண்டு. உலக வாழ்வு முடிந்ததும் மறுமை வாழ்வு ஆரம்பமாகும். அங்கு மனிதர்களது உலக செயற்பாடுகள் விசாரிக்கப்படும். அதிக நன்மை செய்தோருக்கு சுவனமும், அதிக தீமை செய்தோருக்கு நரகமும் வழங்கப் படும்.

ஈமானின் சகல அம்சங்களையும் நாம் விளங்கி உணர்ந்து நம்ப வேண்டும். அவ்வாறு நம்புவதைத்தான் **ஈமான் இக்தியாரி** என்போம். இத்தகைய ஈமான் எமது வழ்க்கைக்கு உந்து சக்தியை வழங்குகின்றது. முஃமின்களாகிய நாம் ஈமானில் உறுதி கொள்ளும்போது எம்மிடம் துணிவு, வீரம், உற்சாகம், தியாகம், கடின உழைப்பு போன்ற பண்புகள் உருவாகும். சோம்பல், கோழைத்தனம், சுயநலம் போன்ற பண்புகள் அற்றுப் போகும்.

ஈமானின் அம்சங்களை நாம் விளங்கி உணர்ந்து நம்புவோம். ஈமான் பரம்பரையால் வருவதல்ல. பகுத்தறிவினால் வருவதுமல்ல. அது அல்லாஹ்வாலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாலும் அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் கூறப்பட்டுள்ளவாறு அமைய வேண் டும். நாமும் அவ்வாறாக ஈமான்கொண்டு செயற்றிறன் உள்ளவர்களாகவும் ஊக்கமுள்ளவர்களாகவும் வாழ்வோம். மறுமையில் வெற்றி பெற்று சுவனத்தை அடைவோம்.

## பயிற்சி

**சரி பிழை கூறுக**

1. ஈமான் என்பதன் பொருள் நம்பிக்கை என்பதாகும். ( )
2. ஈமான் முஜ்மல் என்பது விரிவாக ஈமான் கொள்வதைக் குறிக்கும். ( )
3. வேதங்கள் பற்றிய நம்பிக்கை தவ்ஹீத் எனும் தொகுதியில் அடங்கும். ( )
4. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே இறுதி நபியாவார்கள். ( )

**சுருக்கமான விடை தருக.**

1. நம்பிக்கை காரணமாகத் தவிர்ந்துகொள்ளும் இரு செயல்களைக் குறிப்பிடுக.
2. ஈமான் முபஸ்ஸல் என்பதன் பொருள் யாது?
3. இலாஹ் என்பதன் பொருள் யாது?
4. மலக்குமார்கள் பற்றிய நம்பிக்கை எந்தத் தொகுதியில் அடங்கும்?
5. ஈமான் இக்தியாரி மூலம் முஃமினில் ஏற்படும் பண்புகள் மூன்றைக் குறிப்பிடுக.